**கவனிக்க.**–*2020.06.26ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* IV *(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2183 - 2020 ජූලි මස 03 වැනි සිකුරාදා - 2020.07.03

*2183 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 648 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 651 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 653 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 654 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 659 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, யூலை மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, யூலை மாதம்10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”.

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


647-B 82035-405 (2020/ 07)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

காணி அமைச்சு

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**விலைமனுக் கோரல்**

*பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் – 2020*

*கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் விலைமனுக்கோரல்கள் 2020.07.21 ஆந் திகதி அன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக்கோரல்கள் பி. ப. 2.05 மணிக்குத் திறக்கப்படும்.*

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | கேள்வி மனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப் படும் திகதி |
|---|---|---|---|---|---|
| சப்பிரகமுவ மாகாணம் | கேகாலை | கேகாலை | மாகாண நில அளவையாளர் நாயகம் (சப்பிரகமுவ மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகம், புதிய நகரம் இரத்தினபுரி. | கேகாலை நகருக்கு அருகில் | 2020.08.01ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |
| தென் மாகாணம் | மாத்தறை | கம்புரு பிட்டிய | மாகாண நில அளவையாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகம், காலி. | கம்புருபிட்டிய நகருக்கு அருகில் | 2020.08.01ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |
| மத்திய மாகாணம் | கண்டி | திகன | மாகாண நில அளவையாளர் நாயகம் (மத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகம், கன்னோருவ, பேராதனை | திகன நகருக்கு அருகில் | 2020.08.01ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள் :**

*அனைத்து கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தபட்சம் மூன்று வண்டிகள் நிறுத்தி வைக்கக்கூடிய இடவசதியும் அத்துடன் வாகனத் தரிப்பிட வசதியும் இருத்தல் வேண்டும். அதிகாரிகள் 10 பேருக்கு போதுமான அறைகள் கொண்ட இடவசதி இருத்தல் வேண்டும்.*

*கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்குப் பெறுதல் (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2020.07.21 ஆந் திகதியன்று*

பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

ஏ.எல்.ஷியாமளி சித்திரலேகா பெரேரா,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
கிருல வீதி,
கொழும்பு 5,
2020.06.15.

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்குக் கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2020**
**விலைமனுக் கோரல் விண்ணப்பப்படிவம்**

**கட்டிட உரிமையாளருக்காக:**

01. முழுப்பெயர் :----.
02. முகவரி :----.
03. தொலைபேசி இலக்கம் :----.
04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

**கட்டிடம் தொடர்பாக :**

01. எந்த பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்படவுள்ளது? ----.
02. மாதாந்த வாடகைத் தொகை ? ----.
03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி: ----.
04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ : ----.
05. இடத்தின் விஸ்தீரணம் : ----.
06. கட்டிடத்தின் சதுர அடியும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களும் :----.
07. தனியாக அவதானிக்கக் கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா? ----.
08. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா? ----.
09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில் /கம்பி வேலி/. . . . . . ): ----.
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை : ----.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானவை எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத் தருகின்றேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

7-51

---

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

**பெறுகை அறிவித்தல்**

PROCUREMENT FOR THE REDESIGNING, MANUFACTURING, INSTALLATION & COMMISSIONING OF 02 NOS. M6 LOCOMOTIVES DUAL BRAKE SYSTEM AND RELATED COMPONENTS

PROCUREMENT NO: SRS/ 7671

01. இலங்கை புகையிரத சேவையின் 02 எண்ணிக்கையான M6 Locomotives of dual Brake System and related Components மீள் வடிவமைப்பு , தயாரிப்பு, நிறுவல் மற்றும் இயக்கம் தொடர்பாக, உற்பத்தியாளர்கள்/ விலைமனுதாரர்கள் மற்றும் இயலுமையைக் கொண்டுள்ள ஏனைய நிறுவனங்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை, இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர் அலுவலகம், திணைக்களப் பெறுகைக் குழுத் (உயர்மட்டத்திலானது) தலைவர் பொறுப்பேற்பார்.

விலைமனுதாரர்கள் தமது விலைமனுக்களை நேரடியாகவோ அல்லது அற்றோணித் தத்துவத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட இலங்கையிலுள்ள பதிவுசெய்யப்பட்ட தர அங்கீகாரம் பெற்ற முகவரொன்றின் ஊடாகவோ சமர்ப்பிக்கலாம்.

02. விலைமனுக்கள், 2020.07.14 ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு (இலங்கை நேரப்படி) மூடப்படும்.

03. பெறுகைக் கட்டணமாக இருபதாயிரம், இலங்கை ரூபாவைச் (ரூ.20,000.00) செலுத்துவதன் மூலம், இலங்கை, கொழும்பு10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் ஆவணங்களுடன் கூடிய உருவகங்களிலேயே 2020.06.22 ஆந் திகதி முதல் 2020.07.13 ஆந் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 15.00 மணிக்கு இடையே (இலங்கை நேரப்படி) விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வெளிநாட்டு விலைமனுதாரர்களாயின் இருபதாயிரம் இலங்கை ரூபாவிற்குச் (ரூ.20,000.00) சமமான தொகையொன்றை பணப்பறிமாற்றம் செய்ய முடியுமான வெளிநாட்டு நாணயத்தில் அவர்களின் நாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவராலயங்களுக்குச் செலுத்தி, விலைமனு ஆவணங்களை வழங்குமாறு இலங்கையிலுள்ள அவர்களின் நாட்டுத் தூதுவராலயங்கள் ஊடாக, கொழும்பு10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகருக்கு வேண்டுதலொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள பெறுகைக் கட்டணமான இருபதாயிரம் இலங்கை ரூபா (ரூ.20,000.00) (அல்லது அதற்குச் சமமான பணப்பரிமாற்றம் செய்ய முடியுமான வேளிநாட்டு நாணயம்) மீளளிக்கப்படமாட்டாது.

04. இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் மூடப்பட்டதன் பின்னர், அவை உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுத்திறப்பில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

05.ஒது முன்னோடி விலைமனுக்கூட்டம்,இரத்மலானை ,இலங்கைப் புகையிரத சேவைகள்,பிரதான பொறிமுறை பொறியியலாளரின் அலுவலகத்தில் 2020.07.01 அன்று பி.ப. 2.00 மணிக்கு நடைபெறும்.

06. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,(உயர்மட்டத்திலானது)
புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,
இலங்கை புகையிரத சேவைகள்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு -10.

07. விலைமனு ஆவணங்களை, இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

08. மேலதிக விபரங்களுக்கு பின்வரும் உத்தியோகத்தரைத் தயவு செய்து தொடர்பு கொள்ளுங்கள்.

புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சிய சாலைப் பிரிவு,
த.பெட்டி இல. 1347,
ஒல்கொட் மாவத்தை,கொழும்பு -10, இலங்கை.

தொலைபேசி இல. : 94(11) 2438078 / 94(11)2436818.
தொலைநகல் இல. : 94(11) 2432044.
மின்னஞ்சல் : srs.slr.@ gmail.com
: gmrslr@ sltnet.lk
இணையத்தளம் : www. railway.gov.lk

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு( உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறியீட்டு இலக்கம்.- SRS/F. 7671

7- 256

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் -மட்டக்களப்பு

### பகிரங்க ஏல விற்பனை

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2020.07.11 ஆந் திகதியன்று காலை 9.00. மணிக்கு மட்டக்களப்பு நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணிமுதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டு பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம்மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்கு பற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

ஏ.சீ. ரிஸ்வான்,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
மட்டக்களப்பு,
2020.06.17.

#### ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப்பொருட்களின் விபரம்

| தொ. இல. | வழக்கிலக்கம் | வாகன பதிவு இல. | சான்றுப் பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | 5336/MT/18 | EP BAD -1753 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 2. | 59381/E/20 | EP JT - 3945 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 3. | AR/50/20 | EP JT-4070 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 4. | AR/50/20 | EP GG-2299 | மோட்டார் சைக்கிள் ( உதிரிப்பாகத்துக்கு மாத்திரம்) | 01 |

| தொ. இல. | வழக்கிலக்கம் | வாகன பதிவு இல. | சான்றுப் பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 5. | AR/50/20 | EP TF-3131 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 6. | AR/50/20 | EP MV-8047 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 7. | AR/50/20 | EP UV-8804 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்துக்கு மாத்திரம்) | 01 |
| 8. | AR/50/20 | EP GD-9667 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 9. | AR/50/20 | EP UK-7155 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 10. | AR/50/20 | NC XU-2480 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 11. | 60601/S/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 12. | 38185/E/16 | | சிலிண்டர் | 01 |
| 13. | 38185/E/16 | | அடுப்பு மற்றும் லெகுலேட்டர் | 01 |
| 14. | 44408/E/17 | | பானை, பிளாஸ்டிக் பானை | 02 |
| 15. | 38375/MT/16 | | தலைக்கவசம் | 01 |
| 16. | 38185 E/16 | | வெற்று பரல் | 02 |
| 17. | 60663/E/20 | | வெற்று பரல் | 01 |
| 18. | 60371/E/20 | | வெற்று பரல் | 01 |
| 19. | 60373/E/20 | | வெற்று பரல் | 02 |
| 20. | 60417/E/20 | | வெற்று பரல் | 06 |
| 21. | 60409/E/20 | | வெற்று பரல் | 01 |
| 22. | 60336/E/20 | | வெற்று பரல் | 01 |
| 23. | AR/355/20 | | வெற்று பரல் | 14 |
| 24. | 60664/E/20 | | வெற்று பரல் | 02 |
| 25. | 60478/S/20 | | சவள் | 01 |
| 26. | 60442/S/20 | | சவள் | 01 |
| 27. | 60358/S/20 | | சவள் | 01 |
| 28. | 59919/S/20 | | சவள் | 01 |
| 29. | 60021/S/20 | | சவள் | 01 |
| 30. | 59119/S/20 | | சவள் | 01 |
| 31. | 59928/S/20 | | சவள் | 01 |
| 32. | 59917/S/20 | | சவள் | 01 |
| 33. | 60740/S/20 | | சவள் | 01 |
| 34. | 60493/S/20 | | சவள் | 01 |
| 35. | 60775/S/20 | | சவள் | 01 |
| 36. | 60640/S/20 | | சவள் | 01 |
| 37. | 59083/S/20 | | சவள் | 01 |
| 38. | 60850/S/20 | | சவள் | 01 |
| 39. | 59927/E/20 | | சவள் | 05 |
| 40. | 60372/E/20 | | பானைகள் | 02 |
| 41. | 60049/E/20 | | பானை | 01 |
| 42. | 60818/S/20 | | பானைகள் | 08 |

# ஆய விற்பனையும் குத்தகையும்

## பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை விற்பனை - 2021

*1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்குப் பின்னைய காலப்பகுதிக்கும் கள்ளுத் தவறணை விற்பனைக்கான நிபந்தனைகளுக்கும் அக்காலப்பகுதியில் செல்லுபடியாகும் சகல மதுபான அனுமதிப்பத்திரங்களுக்கும் செல்லுபடியாகும் பொது மதுபான வரி நிபந்தனைகளுக்குமிணங்க 2021ஆம் ஆண்டுக்குள் மதுபான (கள்ளு) சில்லறை விற்பனைக்காக வரப்பிரசாதங்களை விலைக்கு வாங்குவதற்காக பேருவளை பிரதேச செயலாளராகிய என்னால் 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. சகல கேள்விப்பத்திரங்களும் நாட்டின் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலேனும் பெற்றுக்கொள்ளக்கூடிய வாறாக உரிய படிவத்தில் தயாரிக்கப்படுவதோடு -*

*(அ) கேள்விப்பத்திர வைப்புப்பணமாக எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலேனும் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய கேள்விப்பத்திர பணம் வைப்புச்செய்து அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டையும் (ரசீத்) ;*

*(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணி, பூமி ஆகிய நிரந்தர சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரதாரியின் வருமானம் பற்றிய சான்றிதழ்களையும் முன்வைக்க வேண்டும். கேள்விப்பத்திரமும் வருமானச் சான்றிதழும் முன்வைப்பது சம்பந்தமாக மேற்குறிக்கப்பட்ட மதுபான விற்பனைக்கான நிபந்தனைகள் முறையாக பேணப்பட வேண்டுமென்பதை கேள்விப்பத்திரதாரர்களுக்கு ஆணித்தரமாக வலியுறுத்தப்படுகிறது. கேள்விப்பத்திரம் பூர்த்தி செய்யப்படும்போது கேள்விப்பத்திரதாரர் கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்:-*

*(1) கேள்விப்பத்திரம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அவ்வாறு செய்யப்படும் போது அதிலே குறிக்கப்பட்டுள்ள பணத்தினை இலக்கத்தில் மட்டுமல்லாது எழுத்திலும் குறிக்கப்படல் வேண்டும்.*

*(2) பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களில் குறிக்கப்பட்ட சாட்சியாளரின் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.*

*(3) கோடிட்டு வெட்டப்பட்டுச் செய்யப்படும் சகல திருத்தங்களும் கேள்விப்பத்திரதாரரின் குறுகிய கையொப்பத்தையும் திகதியையும் இட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.*

*மேற்குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்றவாறு பூர்த்தி செய்யப்படாத கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.*

*3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரம் -*

*(அ) கேள்விப்பத்திர வைப்புப் பணம் வைப்புச் செய்யப்பட்டு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டும் (ரசீத்) ;*

*(ஆ) வருமானச் சான்றிதழோடும், கடித உறையில் இட்டு முத்திரை பதிக்கப்பட வேண்டும். (சீல்) அக்கடித உறையின் வலது பக்க மேல் மூலையில் 'மதுபான விற்பனை நிலைய இலக்கமும் பெயரும்' குறிப்பிடப்பட்டு பேருவளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் கேள்விப்பத்திரம் கோரும் கடைசி நேரத்திற்கு முன்னதாகவே இடப்பட வேண்டும். அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.*

*4. ஒவ்வொரு கள்ளுத் தவறணைக்காகவும் பெற்றுக்கொள்ளும் இறுதி நேரம் கீழே மேலதிகமாக இணைக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட நேரத்தில் அனைத்து கேள்விப்பத்திரதாரர்களும் பேருவளைப் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*5. சரியாகப் பூர்த்தி செய்து அனுப்பப்பட்ட கேள்விப்பத்திரதாரர் ''தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர்'' எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பின் அத்தினம் பி. ப. 2.30 மணிக்கு முன் பிரதேச செயலாளரால் குறிப்பிடப்படும் ஒரு தொகைப் பணம் முற்பணமாக பேருவளை பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்து கீழ்க்காணும் மதுபானம் சேகரித்து விற்பனை செய்வது சம்பந்தமான நிபந்தனைகளுக்கு கைச்சாத்திடல் வேண்டும். இக்கட்டுப்பணமானது பணமாக அல்லது 'வங்கியில் செலுத்தப்படத்தக்க'*

எனக் குறிக்கப்பட்டு காசோலை மூலமாகவோ, மக்கள் வங்கி மூலமாகவோ அல்லது "பாதுகாப்புடைய காசோலை" என்ற பெயரில் செலுத்தப்பட்ட காசோலை மூலமாகவோ அல்லது அவ்வங்கியின் பெயரில் செலுத்தப்பட்ட காசோலையாகவோ இருத்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத மதுபான விற்பனை நிலையம் மீள் விற்பனைக்காக 2020.09.22 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும். அத்தினத்தில் கேள்விப்பத்திரம் இவ்வர்த்தமானிக்கு அமைவாக முன்வைக்கப்படல் வேண்டும்.

7. மேலதிக விபரங்கள் தேவைப்படின் இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கே. ஜீ. டீ. சதுர மல்ராஜ்,
பிரதேச செயலாளர்,
பேருவளை.

பிரதேச செயலகம்,
பேருவளை,
2020.06.22.

**அட்டவணை**

| தொடர் இல. | பிரிவு | கிராமம் | மதுபான நிலையம் திறக்கப்படும் நேரம் | மதுபான நிலையம் மூடப்படும் நேரம் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள் ளப்படும் இறுதித் திகதி | மீண்டும் விற்பனை செய்யும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பேருவளை பிரதேச சபைப் பிரிவு | அளுத்கமை உப பிரிவு எல்லைக்குள் | மு. ப.11.00 உம் பி.ப.5.00 | பி. ப. 2.00 உம் இரவு 8.00 | ரூபா 2,000 | 2020, ஓகத்து 10 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை | 2020, செத்தெம்பர் 22 ஆந் திகதி மு. ப. 10.30 |

**குறிப்பு** : 2021 ஆம் ஆண்டிற்கு தற்போது மதுபான விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ள இடத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக உறுதி செய்யப்படமாட்டாது. புதிய இடத்தில் மதுபான விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்படுமாயின் அது சம்பந்தமாக பேருவளை பிரதேச செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

7-354

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஸ்மார்வே பிஸ்னெஸ் சொலூஷன் சேர்விசஸ் (பீவீஅ) எல்டீடி
பதிவிலக்கம்: பீவீ 00222665
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.06.07
பதிவு முகவரி : 64/67, சங்கமித்த மாவத்தை, கொழும்பு-13

கம்பனிச் செயலாளர்.

7- 108

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : திலங்கா பரணகம (பிரைவெட்) லிமிட்டெட்
பதிவிலக்கம்: பீவீ 00220217
பதிவு முகவரி : "சிறினிகேத" மஹா ஹீனடியகல, களுத்துறை
அஞ்சல் குறியீடு : 10400
கூட்டிணைப்புத் திகதி: 2020.02.11

நானாயக்கார சுதுஹம் முதலிகே நிஷாமணி
கோசல்யா சமரநாயக்க,
இயக்குனர்கள்.

7- 140

**ISM ECOMPANY APAC (PRIVATE) LIMITED**
**கம்பனி பதிவு இலக்கம் PV 00211249**

**கடன் கொடுத்தவர்களது தன்னியக்கமான கலைப்பு**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 320(1) இன் கீழ்,

2020, யூன் மாதம் 9 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் மேற்சொன்ன கம்பனியின் பங்குதாரர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்ட விஷேட தீர்மானத்தின்படி, இந்த அறிவித்தலானது விடுக்கப்படுவதுடன் பின்வரும் தீர்மானம் (ஆ) ஆனது கடன் கொடுத்தவர்களுக்கான கூட்டத்தில் அதே தினத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டது.

அ. கம்பனியானது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 319(1)(ஆ) பிரிவுக்கு அமைய உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கலைக்கப்படும்.

ஆ. இலக்கம் 97/A, காலி வீதி, கொழும்பு 3 இல் வசிக்கும் குறுப்பு அச்சிகே டொனா சமிந்தி ஏக்கநாயக்க ஆகிய நபர் கம்பனியை கலைத்து அதன் சொத்துக்களை பகிர்ந்து கொடுக்கும் விடயங்கள் தொடர்பாக கம்பனியின் கலைப்பலுவலாக நியமிக்கப்படுவார்.

இ. சொல்லப்பட்ட கலைப்பலுவலர், கலைப்பலுவலராக இருப்பதுடன் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் அனைத்து அல்லது எந்தவொரு அதிகாரத்தையும் செயற்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்படுவார்.

பணிப்பாளர்,
ISM ECOMPANY APAC (PRIVATE) LIMITED.

7- 141

---

**ISM ECOMPANY APAC (PRIVATE) LIMITED**
**கம்பனி பதிவு இலக்கம் PV 00211249**

**கடன் கொடுத்தவர்களது தன்னியக்கமான கலைப்பு கலைப்பவர்களது நியமனம் தொடர்பான அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1) இன் கீழ்,

இலக்கம் 97/ A, காலி வீதி, கொழும்பு 3 இல் வசிக்கும் குறுப்பு அச்சிகே டொனா சமிந்தி ஏக்கநாயக்க ஆகிய நான், 2020, யூன் மாதம் 09 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் ISM ECOMPANY APAC (PRIVATE) LIMITED என்ற கம்பனிக்கு கடன் கொடுத்தவர்களால் அக்கம்பனியின் கலைப்பலுவலராக நியமிக்கப்பட்டதனை இத்தால் அறியத்தருகிறேன்.

கலைப்பலுவலர்,
குறுப்பு அச்சிகே டொனா
சமிந்தி ஏக்கநாயக்க.

ISM ECOMPANY APAC (PRIVATE) LIMITED,
இலக்கம் 97/A,
கொழும்பு 3
2020, யூன் மாதம் 18.

7- 142

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் "J F TRADING LANKA (PRIVATE) LIMITED)" பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது"J F INTER SERVICES (PRIVATE) LIMITED" அதற்குரிய சான்றிதழ் 2018, சித்திரை 20 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் பதியப்பட்டுள்ளது.-

கம்பனியின் முன்னைய பெயர் : J F TRADING LANKA (PRIVATE) LIMITED)
கம்பனியின் இலக்கம்: பீவீ 105647
பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி: இல.03, தர்மபால மாவத்தை,கொழும்பு 3
கம்பனியின் தற்போதைய பெயர் : J F INTER SERVICES (PRIVATE) LIMITED)

நிறுவனத்தின் முகாமையாளர்,
கே. கே.டீ.ஜி. சுரங்க ஜயவர்தன,
இயக்குநர்.

7- 148

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக் கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ரஷீன் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00208801
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 2/4, வாசனா பிளேஸ், களஎலிய, ஜாஎல
பதிவு செய்யப்பட்ட திகதி : 2019.02.14

கம்பனிச் செயலாளர்கள்.

7- 167

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : பாருக் மோட்டர்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 70876
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல.05, அம்பாறை வீதி, சம்மாந்துறை
பதிவு செய்யப்பட்ட திகதி: 2010.01.28

பணிப்பாளர்.

7- 168

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : பிரைட் மவுன்டன்ஸ் ( பிவீடி) எல்டீடி
பதிவிலக்கம்: பீவீ 00221768
பதிவு முகவரி : 5 ஆம் மைல் கல், கட்டுகஹ, மலித்த
கூட்டிணைப்புத் திகதி : 2020, மே 11

பிரைட் மவுன்டன்ஸ் ( பிவீடி) எல்டீடி
கம்பனிச் செயலாளர்.

7- 169

---

## லீடர் கோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் கம்பனியின் பதிவு இல.பீவீ 83111

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1)இன் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பெயர் : லீடர் கோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட
அலுவலக முகவரி : இல.24, கட்டுகுறுந்து வத்தை வீதி, இரத்மலானை
நீதிமன்றம்: வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இல.: HC Civil /66/19/CO
கம்பனி கலைப்பாளர் பெயர்: Gerard Jeevananthan David
முகவரி: Level 3, No.11, Castle Lane. Colombo - 04
நியமன திகதி : 2019.10.21

பணிப்பாளர்.

7- 177/1

---

## லீடர் கோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் கம்பனியின் பதிவு இல.பீவீ 83111

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII இன் கீழான கம்பனி கலைப்பு உத்தரவு பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பெயர் : லீடர் கோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட
அலுவலக முகவரி : இல.24, கட்டுகுறுந்து வத்தை வீதி, இரத்மலானை
நீதிமன்றம்: வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இல.: HC Civil /66/19/CO
நீதிமன்ற கட்டளைத் திகதி : 2019.10.21
கோரிக்கை தாக்கல் செய்த திகதி : 2019.08.19
கம்பனி கலைப்பாளர் பெயர்: Gerard Jeevananthan David
முகவரி: Level 3, No.11, Castle Lane. Colombo - 04

7- 177/2

---

## சகா இன்டிமேட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் கம்பனியின் பதிவு இல.பீவீ 60178 கம்பனி கலைப்பு மற்றும் கலைப்பாளர் விடுவிப்பு அறிவித்தல்

கம்பனியின் பெயர் : சகா இன்டிமேட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட
அலுவலக முகவரி : லொட் 19, புளொக் "B" பியகம ஏற்றுமதி வர்த்தக வலயம், பியகம
நீதிமன்றம்: வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இல.: HC Civil /14/2015/CO
கம்பனி கலைப்பாளர் பெயர்: G.J. David
முகவரி: Leval 3, No.11, Castle Lane. Colombo 04
கம்பனி கலைப்பு மற்றும் கலைப்பாளர் விடுவிப்பு திகதி : 2020.03.13

7- 178

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஜா-எல, வெலிகுறுந்துவத்த, தேவமாதா வீதி, 17 ஆம் இலக்கத்திலுள்ள (863391474V) என்ற இலக்கத்தையுடைய இலங்கை தேசிய அடையாள அட்டையின் உரிமையாளர்) வில்லப்பிரான் சிஸ்குகே பிலிப் அநுருத்த சோவிஸ் ஆகிய நான், இலங்கை, நீர்கொழும்பு, பிரசித்த நொத்தாரிசு என். எவ்.

வேர்ணன் குரே என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2016, திசெம்பர் 31 ஆந் திகதியுடையதும் பத்தரமுல்லை பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தின் 186 என்ற இலக்கமுடைய நாட்புத்தகத்தின் 13 ஆம் பாகத்தின் 04 ஆம் இலக்கமுடைய பக்கத்தில் பதிவு செய்யப்பட்டதும் 867762922V என்ற இலக்கத்தையுடைய இலங்கை தேசிய அடையாள அட்டையின் உரிமையாளருமாகிய டொனா மரியா தருஷி அத்துகோரள என்பவருக்கு வழங்கப்பட்ட 6629 என்ற இலக்கமுடைய பொது அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்து மற்றும் இல்லாதொழித்துள்ளேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

வில்லப்பிரான்சிஸ்குகே பிலிப்
அநுருத்த சோவிஸ்.

7-78

## அற்றோணித் தத்துவத்தை மீளப்பெறுதல்

வருஷ ஹென்னெதிகே நாலக பிரியந்த டீ சொயிசா (தேசிய அடையாள அட்டை இல. 741552264V) இல. 449, பஹல ஈரியகம, பேராதனை, இலங்கை, ஹேவாவசன் ஹக்கலகே நதீகா சமந்தி ஹேவா வசன் (தேசிய அடையாள அட்டை இல. 767813473V) மத்தேகம (1093)D6 வீடமைப்புத் திட்டம், போப்பிட்டிய, இலங்கை தற்போது Oekgshaitna/ Ken kawabuchi/ shi, Higashikawabuchi 1-19-25, 210, ஜப்பான் ஆகிய நாங்கள் எமது நிதி விவகாரங்களை கையாள்வதற்கு எம்மால் இயலாத பட்சத்தில் அவற்றை கவனித்துக் கொள்வதற்கென எமது உண்மையான சட்டபூர்வ பிரதிநிதியாக செயல்படுவதற்கு வருஷ ஹென்னெதிகே சுகததாச டீ சில்வா (தேசிய அடையாள அட்டை இல. 462552190) இல. 449, பஹல ஈரியகம பேராதனை, என்பவருக்கு கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ.ஜி.பந்துல ஸ்ரீ ஜகத் குமார பீரிஸினால் 2012.09.01 ஆந் திகதியிட்டு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் கீழான சகல அதிகாரங்களையும் உரிமைகளையும் இத்தால் செல்லுபடியற்றதாக்கி மீளப்பெற்றுக் கொள்கின்றோம்.

வருஷ ஹென்னெதிகே நாலக்க
பிரியந்த டி சொயிஸா.
ஹேவாவசன் ஹக்கலகே நதீகா
சமந்தி ஹேவாவசன்.

7-79

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் சகலரும் அறிந்து கொள்க, அதாவது 1738, W பெலெரைவ் தெரு, கோர் டீ அலென் என்ற முகவரியில் வதியும் 508217028 என்ற இலக்கத்தையுடைய அமெரிக்கக் கடவுச்சீட்டைக் கொண்டிருக்கும் ஹென்றி சான்ட்லர் மற்றும் 475332273 என்ற இலக்கத்தையுடைய அமெரிக்கக் கடவுச்சீட்டைக் கொண்டிருக்கும் சாலி அல்வராடோ ஆகிய நாம், 2019.02.19 ஆந் திகதியிடப்பட்டு பிரசித்த நொத்தாரிசு ட்விலா ஜீ வில்கட் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு எம்மால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்து செல்லுபடியற்றதாக்குகின்றோம் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம். இதனகத்துப் பின்னர் அற்றோணித் தத்துவம் உடனடியாக இரத்தாவதோடு அதற்கு சட்டரீதியான எந்தவொரு அங்கீகாரமும் கிடையாது.

7-129

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பெலியத்த, புவக்தண்டாவ, 1 ஆவது விஸ்கம்புரயில் வதியும் உபேரத்ன ஜனரபல்கே மதுர கயான் (தே.அ.அ.இல. 902340491V) ஆகிய நான், பெலியத்தயில் வதியும் பிரசித்த நொத்தாரிசு ஐ. சேனாநாயக்க அம்மையாரால் எழுதி சான்றுப்படுத்தப்பட்ட 2595 ஆம் இலக்கம் மற்றும் 2018.08.07 ஆந் திகதிய விசேட அற்றோணி அதிகாரப் பத்திரத்தினால் எனது ஒரேயொரு அற்றோணித் தத்துவதாரராக பெலியத்த, தம்முல்ல, பணுகொரட்டுவ 143 ஆம் இலக்க இடத்தில் வதியும் ஜனத் சஞ்ஜய ராமசிங்க (தே.அ.அ.இல. 910050176V) என்பவர் நியமிக்கப்பட்டார். இந்த விசேட அற்றோணி அதிகாரப் பத்திரம் 2020.05.21 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டு வலுவிழக்கச் செய்யப்பட்டுள்ளதாகவும் இதன் பின் மேற்படி அற்றோணித் தத்துவதாரரால் இது தொடர்பில் பொறுப்புக் கூறமாட்டாது என சகல இலங்கையர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஐ. சேனாநாயக்க,
சட்டத்தரணி மற்றும்
பிரசித்த நொத்தாரிசு,
சத்தியப்பிரமாண
ஆணையாளர்,
'சந்திம', கஹவத்த, பெலியத்த.

7- 171

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தெஹிகஹலந்த, அம்பலன்தொட்ட என்ற முகவரியில் வசிக்கும் இரேஷா ஷிரோமலி (777261732V) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு சகுந்தலா தர்மதாஸ என்பவரினால் இல. 605, 2018.03.13ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட விஷேட அற்றோணித் தத்துவமானது 2020.06.26 ஆந் திகதி முதல் செயல்வலுப்பெறும் வகையில் இரத்துச் செய்யப்பட வேண்டுமென்பதுடன், மேற்படி அற்றோணி அதிகாரம் பெற்ற நிகதலுபொத, ஹுனுபொல, மொரகொல்ல என்ற முகவரியில் வசிக்கும் ஜீவன் குமார ஹீக்கடுவ லியனகே (860391333V) என்பவினால் இத்தினத்தின் பின்னர்

மேற்கொள்ளப்படும் எவ்விதமான நடிவடிக்கைகளுக்கும் நான் பொறுப்புதாரியில்லை எனவும் அனைவருக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

இரேஷா ஷரோமலி.

7-180

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 151, சுகத மாவத்தை, சித்தரமுல்ல, பிலியந்தலை என்ற இடத்தைச் சேர்ந்த தற்பொழுது இலக்கம் 25, ரொணல்ட் வேக்கர் வீதி, காசே ACT அவுஸ்திரேலியா 2913, என்ற முகவரியில் வசிக்கும் அஜித் திலகநந்த புத்ததாச (தேசிய அடையாள அட்டை இலக்கம் 630204780V) , கடவுச்சீட்டிலக்கம் 3341874) ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் மற்றும் பொது மக்களுக்கும் இத்துடன் அறியத்தருவதாவது, 2006.03.23 ஆந் திகதி சமாதான நீதவானும் மற்றும் அவுஸ்திரேலியாவுக்கான இலங்கைப் பிரதி உயர் ஸ்தானிகருமான அசோக்க கிரிஹகம என்பவரினால் உறுதி செய்யப்பட்டு, இலக்கம் 12, வெலேகந்த, இஹல கனேகம, மக்காகம என்ற முகவரியில் வசிக்கும் முசிபத்துகெதர அமரசிங்ஹ என்பவருக்கு எனது விசேட அற்றோணி அதிகாரம் வழங்கப்பட்டு இலங்கையில் எனது அற்றோணி அதிகாரியாக செயல்படுவதற்கான நியமனம் வழங்கப்பட்டது. இத்துடன் இவருக்கு வழங்கப்பட்ட மேற்படி விசேட அற்றோணி அதிகாரம் என்னால் இரத்துச் செய்யப்படுகிறது என்பதாகும். மேலும் இதன் பிறகு மேற்குறிப்பிட்டவரினால் குறித்த அற்றோணி அதிகாரத்தினைக் கொண்டு மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் அற்றோணி அதிகாரம் இரத்துச் செய்யப்படுவதனால் செல்லுபடியாகாது என்பதனையும் மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அஜித் திலகநந்த புத்ததாச.

7-206

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அம்பாந்தோட்டை, சிரிபேபுர, சுசி இல்லம், இலக்கம் எம்-22 ஐச் சேர்ந்த தோன ப்ரேமா குருகம திசானாயக்க ஆகிய நான், அம்பலாந்தோட்டையைச் சோந்த பிரசித்த நொத்தாரிசு ஹஷனி உத்தரா ஹேவாரத்ன என்பவரினால் 64 என்ற இலக்கமும் 2019.08.19 ஆந் திகதியுடையதும் என்னால் அம்பாந்தோட்டை, கேலியபுர, 4 ஆம் கட்டை, மஹவத்த, 6/5 என்ற இலக்கத்தைச் சேர்ந்த ஏக்கநாயக்க முனசிங்ஹ ஆரச்சிகே ஜகத் என்பவருக்கு வழங்கப்பட்ட விஷேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்து இல்லாதொழிக்கின்றேன் என இத்தால் பொது மக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்துக்கும் அறியத்தருகின்றேன்.

அத்தோடு மேற்குறிப்பிட்ட இல்லாதொழிப்பு 2020, யூன் மாதம் 22 ஆந் திகதியிலிருந்து செயல் வலுப்பெறுமென்பதையும் அத்திகதியிலிருந்து அவருடைய செயல்களுக்கும் ஏனைய நடவடிக்கைகளுக்கும் நான் கட்டுப்பட்டவரும் பொறுப்பானவரும் அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தோன ப்ரேமா குருகம,
திசானாயக்க.

2020, யூன் மாதம் 22.

7-207

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

புலத்சிங்ஹல, யட்டகம்பிட்டியவில் வசிக்கும் லொகுஹேவகே பேமசிறி அல்லது லொகுஹேவகே பேமசிறி குணரத்ன (இராணுவத்தினால் வழங்கப்பட்ட அங்கவீனர்களுக்கான அடையாள அட்டை இல. 5151) ஆகிய நான், பன்னிப்பிட்டிய தெபானம, இல. 166 எனும் முகவரியில் வசிக்கும் ரணவக ஆரச்சிகே தோமஸ் கருணாரத்ன (தே.அ.அ.இல. 363450431V) என்பவருக்கு ஹோமாகம, புகையிரத நிலைய வீதி,இல. 49/10 எனும் முகவரியில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசு துஷாந்தி மாலிகா குருப்புஆரச்சி என்பவரால் 2012.02.03 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுப் பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் நுகேகொடை, தெல்கந்த, மேற்கு வலைய அலுவலகத்தின் 90 ஆம் பிரிவு 68 ஆவது பத்திரத்தில் இலக்கம் 1407 இன் கீழ் 2012.02.22ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட 209 ஆம் இலக்கமுடைய அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக அறிவித்துக்கொள்கின்றேன்.

லொகுஹேவகே பேமசிறி அல்லது
லொகுஹேவகே பேமசிறி
குணரத்ன.

2020.06.08.

7-270

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மஹரகம, பமுனுவ வீதி, சந்தன கார்டன்ஸ், ''தம்மிக'' இல. 259/ 2 எனும் முகவரியில் வசிக்கும் சிங்கன்குட்டி ஆரச்சிகே தோன சித்திரா தமயந்தி ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு கே.ரீ. பியதாச என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 1000 மற்றும் 2000.06.24 ஆந் திகதிய அற்றோணித்தத்துவத்தினால் அதே முகவரியில் வசிக்கும் சிங்கன்குட்டி ஆரச்சிகே தோன சமந்தா சஞ்ஜீவனீ (தே.அ.அ.இல. 727130756V) என்பவரை எனது அற்றோணித்தத்துவக்காரராக நியமித்திருந்ததை 2020.06.18 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்வதாக இலங்கைச்

சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகிறேன். இன்றுமுதல் எனது அற்றோணித் தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

சிங்கன்குட்டி ஆரச்சிகே தோன
சித்திரா தமயந்தி.

7-271

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நியூசிலாந்தில் (No. 18, Wyndrum Avenue , Lower Hutt 5011, New Zealand என்னும் முகவரியில் ) குடியிருக்கும் மற்றும் இலங்கை கடவுச்சீட்டு இல. N2862174 ஐ உடைய சிவரூபி ரேனுகா குமாரசிங்கம் கன்னிப் பெயர் ராமேஸ்வரம் ஆகிய நான், கொழும்பு 07, விஜேராம மாவத்தை, இல. 3 என்னும் முகவரியில் குடியிருக்கும் சாந்த சிவசக்தி பீரிஸ் (தே.அ.அ.இல. 585240702V) என்பவருக்கு வழங்கப்பட்ட James Anthony Young Notary Public of Wellington , New Zealand என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.03.09 ஆந் திகதிய அற்றோணித்தத்துவத்தை 2020.02.07 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்து செயலிழக்கச் செய்துள்ளதாக இதன் மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவிப்பதோடு இன்று முதல் எனது அற்றோணித்தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

சிவரூபி ரேனுகா குமாரசிங்கம்
கன்னிப் பெயர் ராமேஸ்வரம்.

7-213/1

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நியூசிலாந்தில் (No. 18, Wyndrum Avenue , Lower Hutt 5011, New Zealand என்னும் முகவரியில் ) குடியிருக்கும் மற்றும் இலங்கை கடவுச்சீட்டு இல. N2862174 ஐ உடைய சிவரூபி ரேனுகா குமாரசிங்கம் கன்னிப் பெயர் ராமேஸ்வரம் ஆகிய நான், கொழும்பு 07, விஜேராம மாவத்தை, இல. 3 என்னும் முகவரியில் குடியிருக்கும் சாந்த சிவசக்தி பீரிஸ் (தே.அ.அ.இல. 585240702V) என்பவருக்கு வழங்கப்பட்ட James Anthony Young Notary Public of Wellington , New Zealand என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1985.11.20 ஆந் திகதிய அற்றோணித்தத்துவத்தை 2020.02.18 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்து செயலிழக்கச் செய்துள்ளதாக இதன் மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவிப்பதோடு இன்று முதல் எனது அற்றோணித்தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

சிவரூபி ரேனுகா குமாரசிங்கம்
கன்னிப் பெயர் ராமேஸ்வரம் .

7-213/2

---

## ஏல விற்பனைகள்

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ஜே ஏ எஃப் மரிக்கார் மற்றும் எஃப் எம் எம் ஃபெரோஸ்
கணக்கு இலக்கங்கள் : 0032 5003 3868

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2018.11.29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.01.04 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2018.12.31 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஜலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான பதினைந்து கோடியே எழுபத்தி ஏழு இலட்சத்து முப்பத்தைந்தாயிரத்தி முந்நூற்றி ஏழு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூபா 15,77,35,307.57) 2018, நவெம்பர் 07 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை பதின்நான்கு கோடியே எழுபத்தி நான்கு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா (ரூபா 14,74,50,000.00) at an interest rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு இரண்டு வீதம் (2%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள் ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர் மூலமாக 2020.07.31 ஆந் திகதி மு.ப. 10.30 மணிமுதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்கவட்ட கோரலே பிரதேச செயலாளர் பிரிவிற்குள் பத்துவில் கண்டி மா நகர சபை எல்லைகளுக்குள் பிட்டகந்த - 250 கிராம அலுவலர் பிரிவின் மஹய்யாவையில் அமைந்த சீ. டீ. எல். பெர்ணாண்டோ மாவத்தை வரிமதிப்பீட்டு இல. 05 ஐ ஏற்ற "கிரில்லகொடவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் சீ. டீ. ஆதிஹெட்டி என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, மே 29 ஆந் திகதியிடப்பட்ட இல. 6013 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஃப். மாப்பலகம என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 3192 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1 மற்றும் வீதிப் பிரவேசம்; கிழக்கு : வீதி மற்றும் கட்டுகஸ்தொட்டை வீதி வரிமதிப்பீட்டு இல. 249 ஐ ஏற்ற வளவுகள் ; தெற்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் எப். மாப்பலகம என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 4233 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 4 மற்றும் மேற்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஃப். மாப்பலகம என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 3192 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 2 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் முப்பது பேர்ச் (0ஏ. 1றூ. 30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 6013 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம் / பக்கம் A 583 / 130 (வேறு விபரங்கள் பந்தி) இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதே வரைபடத்தில் காட்டப்பட்ட பிரதான வீதியிலிருந்து வரும் பாதைக்கான மார்க்க உரிமைகளுடனானது.

கூறப்பட்ட லொட் 1 கீழே காட்டப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

மேற் கூறப்பட்ட மஹய்யாவையில் அமைந்த "கிரில்லகொட வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஃப். மாப்பலகம என்பவரால் தயாரிக்கப்பட்ட 1966, யூன் 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 4233 (293 என தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளது) எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 மற்றும் 3 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : திருமதி எஸ். டபிள்யூ. ஆர். டயஸ் என்பவருக்கு ஒதுக்கப்பட்ட உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஃப். மாப்பலகம என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 3192 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1 மற்றும் வீதிப் பிரவேசம்; வடகிழக்கு : இல.4233 எனும் வரைபடத்தில் A, B, C, D எனக் குறிப்பிடப்பட்ட வீதி ; தென்கிழக்கு : திரு. எச். எல். ரத்வத்தைக்கு சொந்தமான சொத்து ; தெற்கு : இல. 4233 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட்கள் 4, 5, 6 மற்றும் 7 மற்றும் மேற்கு : டொக்டர் சீவலி ரத்வத்தை என்பவருக்கு ஒதுக்கப்பட்ட இல. 3192 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 2, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் இருபத்தி எட்டு தசம் ஏழு ஐந்து பேர்ச் (0ஏ. 1றூ. 28.75பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4233 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டிக் காணிப் பதிவகத்தில் பரிமாணம் / பக்கம் A 583/141 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் சீ. டீ. ஆதிஹெட்டி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1987, நவெம்பர் 12 ஆந் திகதியிடப்பட்ட இல. 1018 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட இக் காணி லொட்கள் 1 - 4 எனவும் அழைக்கப்படும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7- 190

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

### அட்டவணை - 2020

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 03.07.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.06.2020 |
| | | வெள்ளி | 10.07.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.06.2020 |
| | | வெள்ளி | 17.07.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.07.2020 |
| | | வெள்ளி | 24.07.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.07.2020 |
| | | வெள்ளி | 31.07.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.07.2020 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 07.08.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.07.2020 |
| | | வெள்ளி | 14.08.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.07.2020 |
| | | வெள்ளி | 21.08.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.08.2020 |
| | | வெள்ளி | 28.08.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.08.2020 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 04.09.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.08.2020 |
| | | வெள்ளி | 11.09.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.08.2020 |
| | | வெள்ளி | 18.09.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.09.2020 |
| | | வெள்ளி | 25.09.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.09.2020 |

**கங்காணி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.